**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

**அசல் வழக்கு எண். 445/2023**

2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 16-ம் நாள் திங்கள் கிழமை PW1-இன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்தியசாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திருமதி. S.மும்தாஜ், B.Sc.,B.L., சார்பு நீதிபதி, சீர்காழி அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு, பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 16.12.2024 | தந்தை/கணவர் பெயர்: | |
| பெயர்: | சதீஷ் பாபு (PW1) | தாலுக்கா: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தொழில்: | | வயது : | |

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை**

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். முதன்மை சாட்சியத்தை நிரூபணபிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். நிரூபணபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன்.

1) 16.11.1946 நாராயணசாமி மற்றும் சேகர்ராஜாவுக்கு ஏற்பட்ட பாகபிரிவினை ஆவண பதிவு நகல் வா.சா.ஆ. 1 ஆகவும்
2) 26.03.1955 நாராயணசாமி அவர் மகன்களுக்கு இடையே ஏற்பட்ட பாகபிரிவினை ஆவண பதிவு நகல் வா.சா.ஆ.2 ஆகவும்
3) 21.12.1985 ம் தேதியிட்ட 8 ம் பிரதிவாதி 9 ம் பிரதிவாதிகக்கு எழுதிக் கொடுத்த கிரய ஆவண சான்று நகல் வா.சா.ஆ.3 ஆகவும்
4) 01.06.2020 ம் தேதியிட்ட 8, 9 பிரதிவாதிகளுக்கு கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பு அவலுவலக நகல் வா.சா.ஆ.4 ஆகவும்
5) 8 ம்பிரதிவாதியால் திருப்ப பட்ட அஞ்சலக உறை வா.சா.ஆ. 5 ஆகவும்

6) 15.06.2001 ம் தேதியிட்ட 9 ம் பிரதிவாதியின் பதில் அறிவிப்பு சார்வு நகல் வா.சா.ஆ. 6 ஆகவும்

7) 08.06.2020 ம் தேதியிட்ட 11 ம் பிரதிவாதியின் அஞ்சலக ஒப்புகை வா.சா.ஆ. 7 ஆகவும் குறியீடுசெய்யப்படுகிறது. தாவபடி தீர்வாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**